**Notice of expulsion - unsatisfactory participation in learning for students aged 17 years and over**

Using the telephone interpreter service to contact the school

# வெளியேற்றல் அறிவிப்பு – கற்றலில் திருப்தியற்ற வகையில் பங்கேற்ற 17 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு

## பாடசாலையைத் தொடர்பு கொள்ள தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையைப் பயன்படுத்துதல்

மாணவரின் பெயர்

Name of student

அன்புள்ள பெற்றோர்/பராமரிப்பாளர்

NSW கல்வித்துறை மாணவர் நடத்தைக் கொள்கை மற்றும் இடைநீக்கம் மற்றும் வெளியேற்றும் நடைமுறைகளுக்கு இணங்க நான் உங்கள் பிள்ளைக்கு வழங்கிய வெளியேற்றம் – திருப்தியற்ற பங்கேற்பு அறிவிப்பின் விபரங்களை இணைக்கப்பட்ட கடிதம் கோடிட்டுக் காட்டுகிறது.

அதிபரின் அனுமதியின்றி உங்கள் குழந்தை இந்தப் பாடசாலைக்குத் திரும்ப முடியாது. உங்கள் பிள்ளை கல்வியைத் தொடர வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அவர்களுக்குப் பொருத்தமான மாற்று இடத்தைக் கண்டுபிடிப்பது உங்கள் பொறுப்பு. சாத்தியமான வழிமுறைகள் குறித்து உங்களுக்கு ஆலோசனை தேவைப்பட்டால் பாடசாலையைத் தொடர்புகொள்ளலாம்.

உங்கள் குழந்தை வெளியேற்றப்பட்டால் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல் இணைக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட கடிதத்தைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், தயவுசெய்து பாடசாலையை தொடர்பு கொள்ளவும், நாங்கள் உங்களுக்கு விளக்கம் தரலாம். பள்ளிக்கூடத்தை தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி தேவைப்பட்டால், தயவு செய்து 131 450 என்ற எண்ணிற்கு அழைத்து உங்கள் மொழி பேசும் உரைப்பெயர்ப்பாளரைக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் சொல்லுங்கள், உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ அவர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது.

அதிபர் பெயர்

Name of Principal

அதிபரின் தொலைபேசி எண்

Principal’s phone number